
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1124

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

# சாதி ஒழிப்பு பேசிய ‘ஒரே இரத்தம்’

**குமரன்தாஸ்**

50

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

1981-ஆம் ஆண்டு, கலைஞர் ‘குங்குமம்’ வார இதழில் தொடராக எழுதிய கதைக்கு, 1987 -ஆம் ஆண்டில் திரைக்கதை, வசனம் எழுதி கே.சொர்ணம் இயக்கத்தில் - தயாரிப்பில் திரைப்படமாக எடுக்கப்பட்ட படம், ‘ஒரே இரத்தம்’.

தமிழ் சினிமா சாதிப் பெருமிதம் பேசத் தொடங்கிய காலத்தில், பட்டியல் சாதியில் பிறந்து சாதி ஒழிப்புக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்யும் போராளி நந்தகுமாராக, தி.மு.கழகத்தின் இன்றைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தோன்றியதும், சாதி, தீண்டாமை ஒழிப்பை மிகத் தீவிரமாகப் பேசியதுமான திரைப்படமாக ‘ஒரே இரத்தம்’ வெளிவந்தது.

இந்தக் கதையை எழுதும்போதுதான் ‘சமத்துவபுரம்’ திட்டத்திற்கான எண்ணம் தனது உள்ளத்தில் உருவாகியதாகக் கலைஞர் ‘நெஞ்சுக்கு நீதி’ புத்தகத்தில் பதிவுசெய்துள்ளார். கீழ்வெண்மணி, விழுப்புரம் படுகொலைச் சம்பவங்கள்தான் இக்கதையைத் தான் எழுதுவதற்கான காரணங்களாக இருந்தன என்றும் பதிவு செய்துள்ளார். ஆக, சாதி - தீண்டாமைக்கு எதிராகவும் அவை இம்மண்ணிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்பதையும் முழங்கி, தலித் சினிமா என்கிற வகைமைக்கு முன்னோடிப் படமாகவும் ஒரே இரத்தம் வெளிவந்தது எனலாம்.

### பின்னலான திரைக்கதை

சாதி ஆச்சாரத்தில், சாதி வெறியில் ஊறிப்போன உயர் சாதி பண்ணையார், பரமசிவம் (கிஷ்மு). இவரது சாதி வெறி எப்படிப்பட்டது என்றால், தன் வீட்டு நாய் தாழ்த்தப்பட்ட சாதியினரது வீட்டு நாயுடன் கூடியதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், நாய்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றவன் தான் என்று பெருமையாகக் கூறிக்கொள்பவர்.

இவருக்கு நேர் எதிரான கொள்கை உடைய கருப்புச் சட்டைக்காரன் இவரது மகன் மகேஷ் (கார்த்திக்). கணவரின் சனாதன சிந்தனைக்கும் மகனின் சாதி, தீண்டாமை ஒழிப்புக் கொள்கைக்கும் இடையே மாட்டிக்கொண்டு அல்லல்படும் பாசத் தாயாக பார்வதி (மனோரமா).

பண்ணையாரின் சாதி ஆச்சாரங்களைத் தீவிரமாகப் பின்பற்றும் அவரது மகள் காமாட்சி (சீதா), தங்கள் வீட்டுப் பண்ணை வேலையாள் பொன்னனை (பாண்டியன்) மிகக் கேவலமாக நடத்துகிறாள். பொன்னனின் தந்தை மாரி (வீராச்சாமி), தாய், தங்கை செங்கமலம் (மாதுரி), தம்பி நந்தகுமார் (மு.க.ஸ்டாலின்) ஆகியோர் சேரியில் உள்ள குடிசையில் வசிக்கிறார்கள்.

பண்ணையார் நால்வருண சாதி, தீண்டாமை அடிப்படையில் விளங்கும் ஊர்க்கட்டுப்பாடு களை, தீர்ப்புகளை, தண்டனைகளை எல்லாம் நடைமுறைப்படுத்துபவராகச் சாதி வெறிபிடித்த இடைநிலைச் சாதி திருக்கைவால் முனியாண்டி (ராதாரவி) உள்ளார். அவரது மனைவி வீராயி (சிஐடி சகுந்தலா).

இவர்களோடு பண்ணையாரின் பள்ளித் தோழனும் நெருங்கிய நண்பனுமான





வெங்கண்ணா எனும் வெங்கட்ராம ஐயர், மகேஷின் கல்லூரித் தோழி மேரி, கறிக்கடை காசிம் பாய் ஆகிய முதன்மையான கதாபாத்தி ரங்களுக்கு இடையே இயங்குகிறது, ஒரே இரத்தம் திரைக்கதை.

நகரத்திற்குச் சென்று கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வரும் நந்தகுமார் (மு.க.ஸ்டாலின்), பண்ணையாரின் ஊர்க் கட்டுப்பாடுகளையும் தங்கள்மீது சுமத்தப்படுகின்ற சாதி இழிவுகளையும் தீண்டாமையையும் எதிர்த்து, தமது மக்களைத் திரட்டி போராடுகிறார். குறிப்பாக, திருக்கைவால் முனியாண்டியின் தேநீர்க் கடையில் தாழ்த்தப்பட்டோருக்கு மூங்கில் கழி வழியாகத் தேநீர் ஊற்றப்படும் இழிநிலையை முடிவுக்குக் கொண்டுவரப் போராடுகிறார்.

நந்தகுமார், தனது படிப்பை முடித்துவிட்டு ஊருக்கு வந்த முதல் நாள் அன்றே ரயில்வே ஸ்டேஷன் வாசலில் நிற்கும் திருக்கைவால் முனியாண்டியின் மாட்டுவண்டியில் ஏறி பயணம் செய்யும்போது, அவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து கொள்ளும் திருக்கைவால் முனியாண்டி, மாட்டுவண்டியைச் சாய்த்து, நந்தகுமாரை கீழே மணலில் உருட்டி விடுகிறார். அப்போது, மகேஷ் வந்து நந்தகுமாரை தூக்கி விடுகிறார்.

அந்நிகழ்வில் இருந்தே தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் தொடங்கிவிடுகிறது. இதற்கிடையே ஒரு நாள், தாளமுத்து என்கிற தலித் இளைஞர், ஊர் குளத்தில் இறங்கி ஒரு வாளி தண்ணீர் எடுத்ததற்காக அவரை ஆணிப் பலகையில் நடக்க வேண்டும் என்ற தண்டனையைப் பண்ணையார் பரமசிவம் விதிக்கிறார். திருக்கைவால் முனியாண்டி அத்தண்டனையை நிறைவேற்றுகிறார். அவமானத்தால் மனம் நொந்துபோன தாளமுத்து, அந்தக் குளத்திலேயே விழுந்து செத்துப்போகிறார்.

ஊர் நடுவே மேடை போட்டு, தாளமுத்துவின் உருவப்படத்தை நந்தகுமார் தலைமையில் தலித் மக்கள் திறக்க முற்படுகின்றனர். அப்போது, சாதி இந்துக்கள் திருக்கைவால் முனியாண்டி யின் தலைமையில் திரண்டு வந்து தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்க வருகின்றனர். ‘ஒரு தாழ்த்தப்பட்டவரின் உருவப்படம் ஊர் நடுவே திறக்கப்படுவதை அனுமதிக்க நாங்கள் என்ன மான ரோஷம் கெட்டவர்களா?’ என்று கூச்சலிடுகின்றனர்.



நந்தகுமாரும் அவர் பின் திரளும் தலித் மக்களும் ‘நாங்கள் தாளமுத்து படத்தைத் திறக்கத்தான் செய்வோம்’ என்று கூற மோதல் வெடிக்கிறது. அரிவாள், கம்புகளோடு மோதிக் கொள்கின்றனர். அப்போது, சின்னப் பண்ணை மகேஷ் வந்து மோதலைத் தடுத்து நிறுத்தி, சாதி ஒழிப்பு சமத்துவ பிரச்சாரம் செய்கிறார்.

இதைக் கேள்விப்பட்ட பண்ணையார், தன் மகனைக் கண்டிக்கிறார். அதே நேரம், நந்தகுமாரின் சகோதரி செங்கமலம் தலித் மக்களோடு உறவாடும் மகேசின் செயலைக் கேள்விப்பட்டு, அவனுக்குக் காதல் கடிதம் எழுதுகிறாள். இருவருக்கும் காதல் மலர்கிறது.

தம் மக்கள்மீது இரட்டைக்குவளை முறை தீண்டாமைக் கொடுமைக்கு வழிவகுக்கும் திருக்கைவால் முனியாண்டியின் டீக்கடையை ஆட்களைத் திரட்டிச் சென்று நந்தகுமார் உடைத்து நொறுக்குகிறார். இதனால் ஆத்திரம் கொண்ட திருக்கைவால் முனியாண்டி, தனது அடியாட்களுடன் சேர்ந்து தனியே நடந்து வரும் நந்தகுமாரை வெட்டிக் கொலைசெய்து, தங்களது சாதி வெறியைத் தீர்த்துக்கொள்கிறார்கள்.

நந்தகுமாரின் உறவினர்கள், கண்ணீரோடு தங்களது தலைவர் நந்தகுமாரின் சடலத்தை ஊர் தெரு வழியாக சுடுகாட்டுக்கு தூக்கிச் செல்லவும் விடாமல் சாதி இந்துக்கள் தடுக்கிறார்கள். அப்போது, மகேஷ் வந்து தோள்கொடுத்து நந்தகுமாரின் சடலத்தை சாதி இந்துக்களை மீறி தூக்கிச்செல்ல வழி செய்கிறான். இதனால் பண்ணையார் பரமசிவம் மகேசை வீட்டை விட்டு விரட்டுகிறார். மகேஷ் சேரிக்கு வந்து குடியேறியதுடன் காசிம் பாய், மேரி ஆகியோரது ஒத்துழைப்போடு செங்கமலத்தைத் திருமணமும் செய்துகொள்கிறான். தன் மகனின் சாதி மறுப்புத் திருமணத்திற்கு பார்வதி அம்மாள் தன் கணவனுக்குத் தெரியாமல் வந்து கலந்துகொண்டு வாழ்த்துகிறார்.

மகனின் வாழ்க்கையில் மட்டுமல்ல; மகளின் வாழ்க்கையிலும் சாதி வேற்றுமை அற்ற வாழ்க்கையை அமைத்துத் தரும் தாயாக மனோரமா ஏற்றிருக்கும் பாத்திரம், படத்தைத் தாங்கி நிற்கும். ‘நால் வருணத்தால் நாசமாய்ப் போன இந்த நாடும் சமுதாய மும், சாதி ஒழிப்புக்காகப் போராடுவோரின் நான்கு பிணங்களால் திருந்தட்டும்’ என்கிற வசனங்கள், அன்று மனமாற்றத்தை விதைப்பவை யாக இருந்தன.

**...காட்சி விரியும்**

## கல்வியின் தரத்தைக் குலைக்கும் பா.ஜ.க.!

திராவிட மாடல் ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கல்வித் தரம் சர்வதேச அளவில் புருவம் உயர்த்தி பார்க்கச் செய்துள்ளது.

கொரோனாவால் இடைநிற்றலைத் தடுக்க ‘இல்லம் தேடி கல்வி’ திட்டம், ‘முதல் புதுமைப்பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’, ‘நான் முதல்வன்’, ‘காலை உணவு’ என திராவிட மாடல் அரசு பார்த்துப்பார்த்து செதுக்கிய திட்டங்களால் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வித்தரம், சர்வதேச சமூகம் உற்றுப்பார்த்து, பல்வேறு வெளி மாநிலங்களில், வெளிநாடுகளில் செயல்படுத்தும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால், புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்க எத்தனிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, கல்வியில் இருந்து மக்களை விலக்கச் செய்யும் சூழ்ச்சிகளால், அகில இந்திய அளவில் கல்வித்தரம் கேள்விக்குறியாகியுள்ளது. குறிப்பாக, அண்மையில் நடைபெற்ற ஏ.ஐ. மாநாட்டில் வெளிப்படுத்திய போலிப்பெருமிதங்களால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் கல்வித்தரம் பெரும் விவாதப் பொருளாகியுள்ளது.

இது தொடர்பாக, ‘தி வயர்’ ஊடகத்தில் வெளியான கட்டுரையில், உத்தரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான ஆரம்ப பள்ளிகள் மூடப்பட்ட மாநிலங்களாகப் பதிவாகியுள்ளன.

2025 செப்டம்பரில், மகேஷ்வர் பெரி வெளியிட்ட தரவுகளின்படி, ஐ.ஐ.டி.-கள் கூட வேலைவாய்ப்பு சதவிகிதத்தை உயர்த்திக் காட்ட, மாணவர் சேர்க்கை எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுகின்றன. 1,001 இடங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், வெறும் 710 இடங்கள் மட்டுமே மாணவர் சேர்க்கையாகக் காட்டப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மீண்டும் 12 மாநிலங்களில் இயங்கும் 32 போலி பல்கலைக்கழகங்களை அடையாளம் கண்டுள்ளது. இந்த எண்ணிக்கை இரண்டு ஆண்டுகளில் 20-லிருந்து 32-ஆக உயர்ந்துள்ளது என்பதுதான் அதிர்ச்சியான விஷயம். தேசியத் தலைநகரிலேயே 12 நிறுவனங்கள் உள்ளன’ என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### இன்றைய தலைவரைப் பின் தொடர்ந்து...



த.வே.ஏகாம்பரம்

2005-ஆம் ஆண்டு, திருவள்ளூர் இந்துஸ்தான் மோட்டார்ஸ் ஊழியர்களுடன் சென்று கழகத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களையும் சந்தித்து, வாழ்த்து பெற்று மகிழ்ந்தேன். அந்த நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த நான், கழகத்தில் மாவட்டப் பிரதிநிதியாகவும் செயல்பட்டுவந்தேன். இன்றளவிலும் இருபெரும் தலைவர்களின் வழியில் கொள்கைப் பிடிப்புடன் இருவண்ணக் கொடியேந்தி, இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களைப் பின்தொடர்ந்து, கழகத்தின் களப்பணியில் அயராமல் பாடுபட்டுவருகிறேன்.

**- த.வே.ஏகாம்பரம், வட்டக் கழக அவைத்தலைவர்,
71-வது வட்டம், திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி,
சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நீங்கள் விரும்பும் வேட்பாளர்

1966-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில், சென்னை விருகம்பாக்கம் தேர்தல் சிறப்பு மாநாடு, பேரறிஞர் அண்ணாவின் உரை, கழகத்தினரின் கட்டுப்பாடு களை வலியுறுத்தியது. “வெளியாகவிருக்கும் வேட்பாளர் பட்டியலில் நீங்கள் விரும்பியவர் இருக்கலாம். நீங்கள் எதிர்பார்க்காத ஒருவர் இருக்கலாம். கழகம் யாரை நிறுத்து கிறதோ அவர்தான் நீங்கள் விரும்பும் வேட்பாளர் என்று கருத வேண்டும். ஒரே எண்ணத்தில் ஊக்கமுடன் உழைக்க வேண்டும். வெற்றி காண வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131